



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேசுவரர் துணை



# ந ற் சா ந் து ப ட் டி

## ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேசுவரர் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.

அருள் பெருகும் சிவகாமிஅனே, சிதம்பரேசுவரர்சீர், பொருள் பெருகு நற்சாந்துப் பொன்னகரத்தார் கோயில்,

தெருள் பெருகு கும்பாபிஷேக நலம் கண்டுய்வான், வருகஎன உலகினரை மகிழ்ந்தழைக்கும் பத்திரிகை.

### ஸ்ரீ சித்திவிநாயகர் துதி

உலகுயர் செல்வம் எல்லாம் ஓரிடத்து அடைந்தேம் என்று
வலமுற வாழ்வோர் எல்லாம் மகிழுநற் சாந்துபட்டித்
தலமிசைக் கோயில் கொண்டு தன் அடைந்தார்கட்கு இன்பப்
பலனருள் அமலன், சித்திவிநாயகன் பதங்கள் போற்றி.

### ஸ்ரீ சுப்பிரமணியர் துதி

திருவளர் குறமானோடு தெய்வ குஞ்சரமும், பக்கல்
மருவ, நன்மயில் மீதேறி, மதி நலம் பெருகும் அன்பர்
உருவளர் அகமேபோல, ஓங்குநற் சாந்துபட்டிக்
குருவளர் கோயில் மேய குமரன்தாள் சென்னிசேர்ப்பாம்.

### ஸ்ரீ சிதம்பரேசுவரர் துதி

சீர்பூத்த நற்சாந்துத் திருநகரில் தனவணிகர் சிறப்பச்செய்த
ஏர்பூத்த திருக்கோயிலில் காதல் மலிதர வந்திருந்து வாழும்
தேர்பூத்த தில்லைநகர்ச் சிவகாமி மகிழ்கூரும் சிதம்பரேசர்
தார்பூத்த திருவடிகள் நலம்பூத்த பேரன்பால் நயந்து வாழ்வாம்.

### ஸ்ரீ சிவகாமியம்பாள் துதி

மேயபல் உலகம் எல்லாம் வேண்டுவ அளிக்கும் தெய்வத்
தாயென மறைகள் போற்றத் தண்அருள் வடிவு கொண்டு
நாயகனுடன், நற்சாந்து நகரத்தார் கோயில் மேய
ஆய் அருள் சிவகாமித்தாய் அடி, முடிக்கொண்டு வாழ்வாம்.

### ஸ்ரீ சண்டீசர் துதி

விண்ணவரேனும் சிவபிரான் பக்தி மேவிலார் ஆயின் நல்வினையும்
திண்ணிய பாவம் எனப்படும் என்று சிறுவிதி தெரிப்ப,அன்பினரேல்
மண்ணவரேனும் வெய்ய பாதகமும் மறுவில் நல்வினை எனப்படு
மென்று
அண்ணல் அம்புவியில் தெரித்த சண்டீசர் அடிமலர் முடிமிசைப்
புனைவாம்

### வாழ்த்து

வாழ்க அந்தணர் : வானவர், ஆனினம் :
வீழ்க தண்புனல் : வேந்தனும் ஓங்குக !
ஆழ்க தீயதெல்லாம் : அரன் நாமமே :
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

நற்சாந்து பட்டிமிக நல்லவர்கள் வாழுமூர்
பொற்புடைய நகரத்தார் புகழ்விளக்கும் புனிதவூர்
கற்பவர்கள் மிகுந்தவூர் கல்வியினில் கரைகண்ட
விற்பனரை எந்நாளும் வியந்தேத்தும் பேரூரே.

மெய்யன்பர்களே !

திருமலைசமுத்திரம் என்னும் நற்சாந்துபட்டியில் கோயில் கொண்டிருக்கும் சிவகாமி அம்பிகையுடனுறைய சிதம்பரேசுவர சுவாமிக்கும், பரிவார தேவதைகளுக்கும், நிகழும் பிரமோதூத ஆண்டு தைத்திங்கள் 22-ஆம் நாள் **(4—2—1991)** திங்கட்கிழமை கிருஷ்ணபட்சம் சஷ்டி திதியும் ஹஸ்த நக்ஷத்திரமும் சித்தயோகமும் நிஷ்பஞ்சகமும் லக்ஷ்மி யோகமும் கூடிய சுப தினத்தில் காலை மணி 9-30 க்குமேல் 10-15 மணி அளவில் மீன லக்கினத்தில் நடைபெறும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிடேகத்திற்கு வந்து, கண்டு, களித்து, வணங்கி பேரானந்தப் பெருவாழ்வு பெறுமாறு வேண்டுகிறோம்.

### நிகழ்ச்சி விவரம்

| | |
|---|---|
| பிரமோதூத ஹு தைமீ 19வ. 1—2—91 வெள்ளிக்கிழமை காலை மணி 5 to 6-15 | அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை கணபதி ஹோமம். |
| அன்று மாலை 5-45 to 6-30 | கடஸ்தாபனம், யாக பூஜை ஆரம்பம் |
| 20வக்கி 2—2—91 காலை-மாலை | யாக பூஜை |
| 21வக்கி 3—2—91 காலை-மாலை | யாக பூஜை |
| 22வக்கி 4—2—91 காலை | யாக பூஜை |
| 22வக்கி 4—2—91 திங்கட்கிழமை காலை மணி 9-30 to 10-15 | மணிக்குள் மீன லெக்கனத்தில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன **மகா கும்பாபிஷேகம்** |
| அன்று இரவு | **பஞ்சமூர்த்தி திருவுலா** |

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வரங்களின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவமோங்கிப்
புல்குக வுலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க

ஸ்ரீ சிவகாமியம்பாள சமேத சிதம்பரேசுவரர் திருவடி வாழ்க !

பிரமோதூத கார்த்திகை 27.
நற்சாந்துபட்டி.

இங்ஙனம்
**தனவைசியர்களாகிய நற்சாந்துபட்டி நகரத்தார்.**

மதராஸ் சிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.

1991ம் ஆண்டு கும்பாபிஷேக அழைப்பிதழ்